# மாறுபட்ட இறகுகளுடைய பறவைகள்

## இளம் வாசகர்களுக்கான இயற்கைக் கதைகள்




ஆக்கம்: வித்யா

ராஜாராம் சர்மா

மொழிபெயர்ப்பு: சுரேந்தர் பூபாலன்

செம்மையாக்கம்: த. பரசுராமன்

உதவி: க.ச. அமுதா

சு. மகேஸ்வரி

இரா. நளினி

# பிற கதைகள்

முட்டைகளின் மர்மம்

பெரியதும் சிறியதும்

உரிமையானவர்களும் தகுதியானவர்களும்


ரகசிய சபதம்


“நிறுத்துங்கள்!” நான் உரக்கக் கூவினேன்.

இரண்டு மஞ்சள் நிறப் பறவைகள் ஒரு காகத்தை மரத்தைவிட்டு துரத்திக் கொண்டிருந்தன.

அவை அக்காகத்தைத் திறந்த வானத்தில் துரத்திவிட்டு வேகமாகத் திரும்பின. அவை சுற்றும் முற்றும் பார்த்தபடி கூர்மையான கடும் ஒலி எழுப்பின.

நான் இதற்கு முன்னர் இவ்வகைப் பறவைகளைப் பார்த்ததில்லை. ஒன்று அடர்மஞ்சள் மற்றும் கறுப்பு வண்ணத்தில் இருந்தது. மற்றொன்று வெளிர் மஞ்சள் மற்றும் பச்சை வண்ணக் கலவையில் இருந்தது.





அவை பெரியதாக இருந்தாலும் புறாவின் அளவுக்குப் பெரியதில்லை.

“நீங்கள் ஏன் அந்தக் காகத்தைத் துரத்தினீர்கள்?” நான் தயங்கியபடி மெதுவாகக் கேட்டேன்.

பதிலேதுமில்லை.


நான் அவற்றிடம் பேசுவதைத் தவிர்க்கலாம் என்று எண்ணியபோது, “நான்தான் தாய் மாம்பழக் குருவி. இது தந்தை மாம்பழக் குருவி. அதுதான் எங்கள் முதல்பிறப்பு” என்று வெளிர் நிறத்திலிருந்த பறவை பேசியது.

“ஓ! அப்படியா! உங்களின் முதல்பிறப்பு எங்கே?”
என்றேன் நான்.

இம்முறையும் பதில் இல்லை.

நான் அப்புறம் ஒரு பறவைக் குஞ்சைக் கண்டுபிடித்தேன். அது எவ்வித பயமும் இல்லாமல் காய்ந்த புதர்களைப் பிடித்து மேலே வேகவேகமாக ஏற முயன்று கொண்டிருந்தது. விகாரமான தலையையும் குட்டையான வாலையும் கொண்டிருந்தது. மேலும், அது உருவத்தில் தாய் மாம்பழக் குருவியைப் போல இருந்தது. “அதுதான் அவற்றின் முதல் பிறப்பாக இருக்க வேண்டும்” என்று நானே கண்டறிந்ததை எண்ணி உணர்ச்சி வசப்பட்டுக் கத்தினேன்.

நான் கத்துவதையும் அதன் குஞ்சைக் கவனித்ததையும் பார்த்த தாய் மாம்பழக் குருவி “நீங்கள் நினைப்பது சரிதான். அதுதான் எங்களின் குஞ்சு. இன்னொரு குஞ்சு மேலே உள்ள கூட்டில் இருக்கிறது”என்றது.





“மேலே எங்கே?”

நான் கேட்டதைக் குறிப்பால் உணர்ந்த தந்தை மாம்பழக் குருவி தூங்குமூஞ்சி மரத்தின் மேலிருந்த கூட்டிற்குப் பறந்து சென்றது.

அக்கூடு உண்மையாகவே சற்று உயரத்தில்தான் இருந்தது. நிச்சயமாக அதை என்னால் கண்டுபிடித்திருக்க முடியாது.


என்னுடைய பைனாகுலரை எடுத்துவராததை எண்ணி வருந்திக் கொண்ட நான் கண்களைக் குறுக்கி நன்றாகப் பார்த்தேன். உயர்ந்த கிளையின் முனையில் அமைந்திருந்த கவையில் அக்கூடு இருந்தது. அது காய்ந்த புற்களைக் கொண்டு சற்று ஆழமாக, பார்ப்பதற்கு ஒரு தொட்டில் போல் கட்டப்பட்டிருந்தது.

புற்களுடன் சேர்த்து ஒரு பிளாஸ்டிக் பை

பின்னப்பட்டிருந்ததைக் கண்டு நான் ஆச்சரியமடைந்தேன். கற்பனை செய்து பாருங்கள். பறவைகளும் பிளாஸ்டிக்கைப் பயன்படுத்துகிறதே என்று நான் வியந்து நின்றபோது சற்று குழப்பமடைந்தேன்.

“ஏய்! உங்கள் குஞ்சால் பறக்க முடியாது! அது குதிப்பதை நான் பார்த்தேன். தத்தவும் இல்லை. ஏறவும் இல்லை. ì! எதுவாகிலும். எப்படி... எப்படி...” என்று நான் கூறி முடிப்பதற்குள்ளே, “பார்த்தீர்களா... அவன் விழுந்துவிட்டான்” என்று தாய் மாம்பழக் குருவி தன் குஞ்சின் பெருமையை மெச்சும் தோரணையில் முகத்தை வைத்துக் கொண்டு சொன்னது.

தாய் மாம்பழக் குருவி பேசி முடிப்பதற்கு முன்பே, “என்ன!” என்று நான் ஆச்சரியத்துடன் கேட்டேன்.





அச்சமயம் ராண்டிற்கு முன் நான் மரத்திலிருந்து விழுந்து கை எலும்பு முறிந்தபோது ஏற்பட்ட வலியின் நினைவு வந்தது.

“நீங்கள் அவன் கையில் ஏதேனும் முறிவு ஏற்பட்டிருக்கிறதா அல்லது வேறு எங்காவது அடிபட்டிருக்கிறதா” என்று பார்த்தீர்களா?

“சிறகுகளைத்தானே சொல்லுகிறீர்கள்? இல்லை. உண்மையில் எந்த முறிவும் ஏற்படவில்லை. இது அவன் கூட்டை விட்டு வெளியே வந்து பறக்க வேண்டிய தருணம். அவன் விழுந்துவிட்டான், ஆனாலும் பறக்கக் கற்றுக்கொள்வான். பறவைக் குஞ்சுகள் கூட்டைவிட்டு வெளியேற தயாராவதற்கு முன்பே சிறகுகளை அடிக்கத் தொடங்கிவிடும். மேலும் அவை விழுவது எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது” என்றது.

“உங்கள் குஞ்சுகளுக்குக் கீழே விழும் பழக்கமிருந்தும், கூடு

ஏன் இவ்வளவு உயரத்தில் இருக்க வேண்டும்? நீங்கள் அதை மிகமிக குறைவான உயரத்தில் கட்ட வேண்டும் என்று யோசிக்கவில்லையா?”

நான் விழுந்த மரத்தைப் போன்று மூன்று மடங்கு உயரத்தில் இந்தக் கூடு உள்ளது.

தாய் மாம்பழக் குருவி உள்ளன்புடன் சிரித்தது. “நன்றாகக் கூறினாய்... நாங்கள் உயரமான மரங்களில் வாழும் பறவைகள். தரையில் மிக மிக அரிதாகவே காணப்படுவோம். பழங்கள், பூவிலுள்ள தேன் முதலியவையே எங்களின் உணவு. அவை உயரமான மரங்களில் மிகுதியாகக் கிடைக்கும். நாங்கள் பாதுகாப்பான, வசதியான இடங்களில் மட்டுமே கூடுகளை அமைப்போம். எங்கள் குஞ்சுகள் வளர கோடைகாலம் அவசியம். எனவே, நாங்கள் இனப்பெருக்கம் செய்வதற்காகவே தென் இந்தியாவிலிருந்து வட இந்தியாவிற்கு





வந்துள்ளோம்” என்றது.

நான் அக்கூட்டை மற்றொரு முறை பார்ப்பதற்காகத் திரும்பினேன். அக்கூட்டிற்கு மேலே, சற்று உயரத்தில் ஏதோ அசைவதைக் கவனித்தேன். அதில் மற்றொரு பறவை இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்தேன். அது பச்சை வண்ணத்தில் கொழுத்து இருந்தது. மிக உயரத்தில் அது இருந்ததால் என்னால் சரியாகப் பார்க்க முடியவில்லை. ஆனால், அது மெத்தை போன்றிருந்த சிறு கிளையில் அமர்ந்திருந்ததென்று நினைத்தேன்.

“யார் அது?” என்று வினவினேன்.

“ஓ! அது பச்சைப் புறா. அதுவும் அங்கே கூடு கட்டுகிறது.” தாய் மாம்பழக் குருவி தொடர்ந்தது, “நான் உங்களுக்கு ஒன்றைக் காட்டுகிறேன். நமக்கு அருகில் இருக்கும் மரத்தை

உங்களால் பார்க்க முடிகிறதா? அது ஓர் அத்தி மரம். அதை நன்றாக உற்றுப் பாருங்கள். அதன் கடைசியில் கிண்ணம் போன்ற சிறு கூடு இருப்பது உங்களுக்குத் தெரிகிறதா?

உண்மையில் அது மிகச் சிறியது. வெள்ளைக் கண்ணிக்கு உரியது. அதற்குச் சற்று உயரத்தில் அமைந்திருக்கும் அடுத்த கிளையில் கிண்ணம் போன்ற இன்னொரு கூடு இருப்பது தெரிகிறதா? அது சற்று பெரியது; தேர்ந்த மெல்லிய குச்சிகளைக் கொண்டு கட்டப்பட்டது. அது கொண்டைக் குருவியினுடையது. மிகவும் தாழ்ந்திருக்கும் கிளையில் தொங்கும் அந்தக் கூட்டைப் பார்க்க முடிகிறதா? அது ஊதா நிற தேன்சிட்டின் கூடு. வலப்பக்கத்தில், கிடைமட்டத்தில் அமைந்திருக்கும் கிளையின் கவையில் கிண்ணம் போன்ற கூட்டைப் பார்க்க முடிகிறதா? ஏன், அதிலுள்ள குஞ்சுகளைக் கூட உங்களால் பார்க்க முடியும். அது கரிச்சான் குருவியின் கூடு. அதற்கடுத்த மரத்தைப் பாருங்கள். இன்னொரு





ங்குமூஞ்சி மரம். அதில் நீண்ட வாலை உடைய பழுப்பு நிறச் சிறு பறவை தெரிகிறதா? அதுதான் தந்தை அரசவால் ஈப்பிடிப்பான். அப்புறம் அந்த சிறிய ...” என்று தாய் மாம்பழக் குருவி தொடர முயன்றபோது,

“நிறுத்து! நிறுத்து! இங்கே என்ன நடக்கிறது? பலவிதப் பறவைகள், பலவிதக் கூடுகள். எனக்கு எங்கே பார்ப்பது என்றே புரியவில்லை. எனக்கு கிறுகிறுவென தலை சுற்றுகிறது! நீ எனக்கு வேறு எதையும் காட்டுவதற்கு முன்பே...” என்று நான் பேசிக் கொண்டிருக்கும்போதே,

தந்தை மாம்பழக் குருவி என் பேச்சில் குறுக்கிட்டது. “அவள் சொல்ல வருவது என்னவென்றால், நாங்கள் கரிச்சான் குருவிக் கூட்டின் அருகில் தான் கூடுகளை அமைக்க விரும்புவோம்.”

“அது, ஏன்?” என்று கேட்டேன்.

அதற்குத் தந்தை மாம்பழக் குருவி “சாதாரணக் காரணம்தான். கரிச்சான் குருவிகள் நன்கு காவல் காப்பவை. அவை தங்கள் எல்லையை உறுதியாகப் பாதுகாக்கும். பிற பறவைகளால் தங்களின் முட்டைகளுக்கும் குஞ்சுகளுக்கும் ஆபத்து ஏற்படும் என்று தெரிந்தால், அவற்றைத் தாக்கவும், துரத்தவும் தயங்காது. அவை சிறிய பறவைகளை மட்டுமே தங்களின் அருகில் கூடு கட்ட அனுமதிக்கும். கரிச்சான் குருவி இருக்கும் மரத்தில் காகத்தின் கூடு இருப்பதை நீங்கள் பார்ப்பது அரிது” என்று பதிலளித்தது.

“காகம்?” அத்துரத்தலை நான் நினைத்துப் பார்த்தேன். காகத்திற்கு இங்கென்ன வேலை? நீங்கள் ஏன் அதை துரத்தினீர்கள்!”

“சரி, உங்களுக்குக் கட்டாயம் தெரிய வேண்டுமா...”





“உணவுப் பழக்கம் பறவைக்குப் பறவை வேறுபடும். சில பறவைகளுக்குப் பழங்கள் மிகவும் பிடிக்கும், சில பூவிலுள்ள தேனை விரும்பும், சிலவற்றுக்கு விதைகள், பெரும்பாலான பறவைகள், எங்களையும் சேர்த்து, பூச்சிகளை உண்போம். உங்களுக்குத் தெரியுமா? சில பறவைகள் விரும்புவது முட்டைகள், குஞ்சுகள், சிறு பறவைகள் அல்லது...” என்றபோது

“பொறு! நான் புரிந்துகொண்டேன்! அந்தக் காகம் உன் குஞ்சைப் பிடிக்க முயன்றது” என்றேன்.

“கரிச்சான்கள் ்ரளவிற்குத்தான் இப்பறவைகளுக்குப் பாதுகாப்பளிக்க முடியும். தவிர, எப்போதும் அவற்றை நம்பி இருக்க முடியாது. அவை காகத்தைத் துரத்தியதைப் போன்று தங்களின் பங்கை இப்பறவைகள் ஆற்ற வேண்டும்” என்று எண்ணியவாறு நடந்தேன்.

## கதாபாத்திரங்களைச் சந்தியுங்கள்

இக்கதை கடந்த 2010 ஆம் ஆண்டு, மே முதல் சூலை வரை, தெற்கு தில்லியின் எல்லையிலுள்ள காட்டின் ஒரு பகுதியான சஞ்சய் வனத்தில் உற்றுநோக்கியதன் அடிப்படையில் உருவானது. மாம்பழக் குருவி மே 30 ஆம் நாள் கூடு கட்டத் தொடங்கியது. சூலை 11 அன்று, முதல் குஞ்சு கூட்டை விட்டு வெளியேறியது.

இப்புத்தகத்திலுள்ள புகைப்படங்கள் பறவைகள், கூடுகளின் உண்மையான அளவைக் குறிக்காது.





முதல் பிறப்பு



தந்தை மாம்பழக் குருவி



தாய் மாம்பழக் குருவி



பச்சைப் புறா



வெள்ளைக் கண்ணி



செம்புழைக் கொண்டைக் குருவி



செம்புழைக் கொண்டைக் குருவிக்குஞ்சு



கூட்டிலிருக்கும் தாய் ஊதா தேன்சிட்டு



தந்தை ஊதா தேன்சிட்டு



**கரிச்சான்**



தாய் அரசவால் ஈப்பிடிப்பான்



தந்தை அரசவால் ஈப்பிடிப்பான்

*மாறுபட்ட இறகுகளுடைய பறவைகள்* published by VIDYA ONLINE is licensed under a Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 3.0 Unported License (http://creativecommons.org/licenses/by-nc-sa/3.0/)

Permissions beyond the scope of this license may be available at admin@vidyaonline.org

http://vidyaonline.net